*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி - சென்னை - 4*
*15 08 2025 FRIDAY 6.45 AM*
*வணக்கம்-மாநில செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

- *நாட்டின் 79-வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.*
- *பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்னும் சற்றுநேரத்தில் தில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.*
- *நாட்டின் டிஜிட்டல் மாற்றத்தில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.*
- *திமுக ஆட்சியில் தமிழகத்தின் கடன் சுமை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*
- *Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் 79வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.*

*இதனையொட்டி, தில்லி செங்கோட்டையில் இன்னும் சற்று நேரத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.*

*தொடர்ந்து 12வது முறையாக திரு. நரேந்திர மோடி தேசியக்கொடியை ஏற்றி வைக்கிறார்.*

*சுதந்திர தின விழாவில் பங்கேற்க, பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர், சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.*

*இதனையொட்டி. தில்லியில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*மாநில தலைநகரங்களில் அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றவுள்ளனர்.*

*சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.*

*இந்த நிகழ்ச்சியின் போது, பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளையும் அவர் வழங்கவுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் இன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.*

*தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் இன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறும் என மாநில ஊரக வளர்ச்சித் துறை தெரிவித்துள்ளது.*

*இணைய வழி வரி செலுத்தும் சேவை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை இந்தியா இயக்கப்பணிகள், ஜல்ஜீவன் இயக்கப்பணிகள் உள்ளிட்டவை குறித்து கிராம சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது*

*>>>>>><<<<<<*

*வலுவான தேசத்தை கட்டமைப்பதில் நாட்டு மக்கள் அனைவரின் பங்களிப்பும் அவசியம் என்று குடியரசுத்தலைவரின் சுதந்திர தின உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில். ஒருங்கிணைந்த முயற்சிகளால் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், எதிர்கால வாய்ப்புகளையும் குடியரசுத்தலைவரின் உரை எடுத்துக்காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*நாட்டின் விடுதலைக்காக ஏராளமானோர் செய்த தியாகங்களையும் குடியரசுத்தலைவர் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*மழைநீர் சேகரிப்பில் ஊராட்சி நிர்வாகங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜல்சக்தி துறை இணையமைச்சர் திரு. சோமன்னா கூறியுள்ளார்.*

*சுதந்திர தின விழாவில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து, சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ள 150 ஊராட்சித் தலைவர்களுடன் நேற்று அவர் கலந்துரையாடினார்.*

*நீர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பில் உள்ளூர் அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.*

தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றிலும் ஊராட்சித் தலைவர்கள் சிறப்பாக செயல்பட்டு, கிராமங்களை தூய்மையானதாக வைத்திருக்க வேண்டும் என்றும் திரு. சோமன்னா கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

நாட்டின் டிஜிட்டல் மாற்றத்தில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமைச்சர், மக்களை மையமாக கொண்ட வெளிப்படையான நிர்வாகத்தை வழங்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று தெரிவித்தார்.

மின்ஆளுமையில் தமிழக அரசு உறுதியுடன் செயல்படுவதாக அவர் கூறினார்.

அரசின் சேவைகள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வாட்ஸ்ஆப் அடிப்படையிலான சேவைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக, META நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

>>>>>><<<<<<

தெரு நாய்க்கடி சம்பவங்களைத் தடுக்க சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது சென்னையில் கடந்த ஆண்டு சுமார் 20 ஆயிரம் நாய்க்கடி சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தெரு நாய்களுக்கு தடுப்பூசி போட்டு தனி காப்பகங்கள் அமைத்து பராமரிக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை மூன்று வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.

>>>>>><<<<<<

திமுக ஆட்சியில் தமிழகத்தின் கடன் சுமை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஆம்பூர், குடியாத்தம், கேவி. குப்பம் ஆகிய இடங்களில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் கூடுதலாக 4 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொழில் வளர்ச்சியில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளிக்கவே இல்லை என்று மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு கூறியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், திமுக தேர்தல் அறிக்கையில் 285வது வாக்குறுதியாக அது இடம்பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வாக்குறுதிகளை அளித்துவிட்டு, தற்போது அவற்றை நிறைவேற்றாமல் திமுக அரசு பொய்களை கூறி வருவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழக சுற்றுலாத் துறையின் சார்பில் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் பட்டம் விடும் திருவிழா நேற்று தொடங்கியது.

நான்கு நாட்கள் இந்த திருவிழா நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சுரெகா 58 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

*இருவரிச் செய்திகள்*

*பிரிட்டன் பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மரை, யுக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி லண்டனில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.*

*>>>>>><<<<<<*

*ஆழ்கடலில் வெற்றிகரமாக ஆய்வு செய்த ராஜூ ரமேஷ் மற்றும் ஜிதேந்திர பால் சிங் ஆகியோருக்கு மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*பால் உற்பத்தித் துறையில் சிறப்பாக செயலாற்றுவோருக்கான கோபால் ரத்னா விருதுகளுக்கு இன்று முதல் செப்டம்பர் 15-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பாம்பன் கடலில் உள்ள செங்குத்து தூக்கு பாலத்தை தெற்கு ரயில்வே மதுரை கோட்ட மேலாளர் திரு. ஓம் பிரகாஷ் மீனா ஆய்வு செய்தார்.*

*>>>>>><<<<<<*

*தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் சார்பில், திருவாரூர் மாவட்டம் வடுவூரில் பறவைகளால் பரவும் நோய்களைக் கண்டறியும் முகாம் நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*சுதந்திர தினத்தை முன்னிட்டு ராமநாசபுரம் மாவட்டத்தில் ஐஎன்எஸ் பருந்து கடற்படை தளம் சாரபில் ஃபிட் இந்தியா விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*கிருஷ்ணகிரியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலைகளை வைத்து வழிபடுவோர் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என ஆட்சியர் திரு தினேஷ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*புதுக்கோட்டையில் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வை மாவட்ட ஆட்சியர் திருமதி அருணா தொடங்கி வைத்தார்.*

*>>>>>><<<<<<*

வேர்களைத் தேடி திட்டத்தின் கீழ் தமிழகம் வந்துள்ள வெளிநாடுகளில் வசிக்கும் தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட மாணவர்கள், காஞ்சிபுரம் பட்டுப் பூங்காவைப் பார்வையிட்டனர்.

>>>>>><<<<<<

சென்னையில் புறநகர் மின்சார ரயில்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயக்கப்படும் என தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

>>>>>><<<<<<

**விளையாட்டுச் செய்திகள்**

*Saipan* சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Tanya Hemant* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*Northern Marianas*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், *14-16, 15-12, 15-9* என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் *Lee Megan*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Anahat Singh* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<